புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# உடுமலை நாராயணகவி பாடல்களில் திராவிட இயக்கச் சிந்தனைகள்

முனைவர் ஆ.த.பரந்தாமன்
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் உயராய்வு மையம்
யாதவர் கல்லூரி, மதுரை -14

ஆய்வுச் சுருக்கம்

மனிதன் ஒருவனுக்குத்தான் சிந்தனை உண்டு. பகுத்தறிவு உண்டு. விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்துவது அந்தப் பகுத்தறிவே. மனிதன் பகுத்தறிவை மறந்து மூடநம்பிக்கைகளை நம்பி ஏமாறுவதைக் கண்ட சுயமரியாதை எண்ணம் கொண்ட உடுமலை நாராயணகவி அவர்கள் திராவிட இயக்கச் சிந்தனைகளோடு பாடல்கள் புனைந்துள்ளார். அவற்றை பகுத்தறிவின் மூலம் பகுத்தும் ஆராயும் திறன் மற்றும் உண்மைப்பொருளைக் கண்டறிதல், கடவுள் மறுப்பின் மூலம் கடவுளின் மூலம் அனைத்துச் செயல்களும் நடக்கும் என்ற நம்பிக்கையை விட்டொழித்து அறிவியல் வளர்ச்சி நிலைகளைக் கண்டறிதல் வேண்டும் மூடநம்பிக்கை ஒழிப்பு, புராண மறுப்பு போன்ற பொருண்மைகளைக் கொண்டதாக இக்கட்டுரை அமையும் .

## ஆய்வு நெறிமுறைகள்

உடுமலை நாராயணகவியின் பாடல்கள் வெளிப்படுத்தும் செய்திகளை வெளிப்படுத்துவதால் விளக்கவியல் அணுகுமுறையும் , பெரியாரின் கருத்துகளோடு ஒப்பிடப்பட்டுள்ளதால் ஒப்பீட்டு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளது.

## முன்னுரை

மனிதன் ஒருவனுக்குத்தான் சிந்தனை உண்டு. பகுத்தறிவு உண்டு. விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்துவது அந்தப் பகுத்தறிவே. மனிதன் பகுத்தறிவை மறந்து மூடநம்பிக்கைகளை நம்பி ஏமாறுவதைக் கண்ட சுயமரியாதை எண்ணம் கொண்ட உடுமலை நாராயணகவி அவர்கள் திராவிட இயக்கச் சிந்தனைகளோடு பாடல்கள் புனைந்துள்ளார். அவற்றை பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, புராண மறுப்பு போன்ற பொருண்மைகளில் இங்கு காணலாம்.

## பகுத்தறிவு

உண்மை எது, பொய் எது எனப் பகுத்தறியும் அறிவே பகுத்தறிவு என்பர். எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் கேட்டவாறே கொள்ளாமல் அப்பொருளில் மெய்யான பொருளைக் காண்பதே அறிவு என்பதை,

> ‘‘எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு’’[i]

என்று திருவள்ளுவர் கூறுவதிலிருந்து பகுத்தறிவின் அடிப்படை தொடங்குகிறது என்பதை அறிய முடிகின்றது. ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்விகளைக் கேட்கவேண்டும் என்ற சாக்ரடீஸின் கூற்று பகுத்தறிவின் பாதையில் வந்ததே ஆகும். எதனையும் காரண காரியம் அறியாமல் ஏற்றுக்கொள்வது தவறு. உண்மையை அறிய வேண்டும் என்ற அறிவே பகுத்தறிவு ஆகும்.

"பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக் கொண்டு தெளிவடைவது.
மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக்கொள்வது" [ii]

என்று கூறும் தந்தை பெரியார் பகுத்தறிவாளர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை

"பகுத்தறிவுவாதி அறிவுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும்.
எதிலும் பற்றிருக்கக் கூடாது. தன்னுடைய அறிவுப்படி
நடந்துகொள்ள வேண்டும்." [iii]

என்று குறிப்பிடுகின்றார். மேலும் தன்னுடைய கருத்துக்களைக் கூறும்பொழுது இதனை இப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறவில்லை. உங்களுக்குச் சரியென்றால் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று தனது பேச்சின் முடிவில் கூறுகின்றார். அதனைப்போன்றே தன்னுடைய அறிவுப்படி நடந்துகொள்பவர்களை பகுத்தறிவாதி என்று குறிப்பிடுகின்றார். பற்றிருக்கக்கூடாது என்கின்றார். பற்றிருந்தால் பயம் வரும். பயம் வந்தால் பக்தி வரும். பக்தி வந்தால் புத்தி போகும் என்ற கொள்கை கொண்டவராக இருக்கிறார் தந்தை பெரியார்.

கடவுள் மறுப்பு

கடவுள் மறுப்புக் கொள்கையில் உறுதியாக நின்றவர் தந்தை பெரியார் கடவுள் மறுப்பைப் பரப்புரைகள் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறினார் தந்தை பெரியார். திரைப்படங்களில் அவற்றைச் சாடியும், கிண்டல் செய்தும் பாடல்கள் புனைந்து மக்களுக்குத் தம் கொள்கைகளை எடுத்துச் சென்றார் உடுமலையார். இதனை,

"சாணிக்குப் பொட்டிட்டுச் சாமி என்பார் செய்கைக்கு
நானி உறங்கு : நகைத்து நீ கண்ணுறங்கு" [iv]

என்று தாலாட்டுப் பாடலில் கடவுள் மறுப்பைப் புகுத்தியுள்ளார். இதனை வைத்துப் பார;க்கும் போது குழந்தைப்பருவத்திலிருந்தே கடவுள் மறுப்புக் கொள்கையை தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்ற ஆவலுடையவராக இருந்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. மேலும் உடுமலை நாராயணகவி அவர்கள் திருநீலகண்டர் படத்தில் இருவர் காமன் பண்டிகை லாணி பாடும்போது ஒருவர் பாடுவதற்குமுன் 'பங்கையன் நாவில் இருப்பவளே" என்று வணங்குகின்றார். தற்பொழுதும் கூட இவ்வழக்கம் உண்டு. கலைமகள் என்நாவில் நடனமாட வேண்டும் என் வணங்குபவர் வணங்கி, பாடவோ, பேசவோ ஆரம்பிப்பவர் தற்காலத்திலும் உண்டு. உடுமலையாரின் காலத்திலும் இத்தகைய வழக்கம் இருந்துள்ளதை கிண்டல் செய்யும் அவர்,

'கல்விக்கரசி தமிழ்ச் செல்வி யென்றொரு பெண்ணை
கைதொழுதீரே அந்த மங்கை மங்கை
மறையவன் நாவிலவள் உறைவது நிஜமானால்
மலஜலம் கழிப்பது எங்கே எங்கே" [v]

என கல்விக்குக் கலைமகள் என்பது எல்லாம் பொய் என் மறுக்கின்றார் உடுமலைநாராயணகவி. மேலும் அறிவியலை வரவேற்கும் வண்ணம் பழைய மூடநம்பிக்கைகளை முறியடிக்கும் வளர்ச்சி நிலைகளைக்,

"காசிக்குப் போனாக் கருவுண்டாகுமென்ற
காலம் மாறிப்போச்சு - இப்ப
ஊசியைப் போட்டா உண்டாகுமென்ற
உண்மை தெரிஞ்சு போச்சு" [vi]

என்று பழைய மூடநம்பிக்கை மாறி புதிய அறிவியல் வளர்ச்சி நிலை அடைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டியுள்ளார் உடுமலையார். இதற்குப் பதில் சொல்வதாகப் பழமையை நம்பும் பெண் பெண் பாடுவதாக,

"ஈசன் செயலால் இறப்பும் பிறப்பும்
எல்லாம் நடக்குதுங்க அதை
எண்ணாமே எவனோ சொன்னான்னு கேட்டு
ஏமாந்து போகாதீங்க" [vii]

ஒரு பாடல் அமைந்துள்ளது. இதனை மறுத்து,

"எட்டாத விசயத்தை ஈசன் பேரால்

இயற்கை யெங்குறாங்க : இனிமேல்
இயற்கை கூடச் செயற்கையில் ஆகும்
முயற்சியும் பண்ணுறாங்க.''[viii]

என்று மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதனைத் தானே கூறி அவர்களுக்குப் பதிலும் கூறிப் பகுத்தறிவையும் புகுத்துகின்றார் உடுமலையார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு

கடவுள், மதம் ஆகிய இரண்டின் பெயரால் நடக்கும் அத்துணையும் உண்மை என்றும் கடவுளைப்பற்றி மறுப்பது பாவம், அதனால் நமக்குத் தீங்குவரும் என்று நினைத்துக்கொண்டு பகுத்தறிவை மறந்து மூடநம்பிக்கையில் முடமாகிப்போனார்கள் மக்கள். பக்திக்கு ஆரம்பம் நம்பிக்கை தான். அதையும் தாண்டி பயபக்தியாக மாறி மக்கள் அச்சம் கொண்டு கடவுளை வணங்க ஆரம்பித்தார்கள். மக்கள் தங்கள் அறிவை மறந்து மூடநம்பிக்கையில் மூழ்கியபோது சுயமரியாதை இயக்கம் பரப்புரைகள் மூலம் மக்களிடம் பகுத்தறிவை ஊட்டியது. மக்கள் கடவுளின் பெயரால் செய்யும் செயல்களைச் சுயமரியாதை இயக்கத்தினர் செய்து காண்பித்து மூடநம்பிக்கைகளை உடைத்தெறிய முற்பட்டனர். திரைப்படங்களிலும் சுயமரியாதை இயக்கத்தினரால் மூடநம்பிக்கை பற்றிக் கிண்டல் செய்யப்பட்டது. உடுமலையார் தனது பாடல்களின் மூலம் மூடநம்பிக்கைகளை முறியடிக்க முறியடிக்க முற்படுகிறார். இதனை,

''மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு, மனங்கவரும் கற்பூரப் பெட்டகமே''[ix]

என மூடத்தனத்தை ஒழிக்க பாரதிதாசன் அழைக்கின்றார். அவருடன் உடுமலையார், மழை வருவது அறிவியல் என்று எண்ணாமல் ஆண்டவன் தான் காரணம் என யாகம் நடத்துவது , இறைவனுக்குப் பூசை செய்வது , அதையும் தாண்டி கழிதைக் கல்யாணம் போன்ற மூடநம்பிக்கை கள் அரங்கேறி வருவது அறிந்த விசயம். இதனை,

''மழை வருமென்றே மந்திரம் செபிப்பது
அந்தக் காலம் ; - மழையைப்
பொழிய வைக்கவே யந்திரம் வந்தது
இந்தக்காலம்!''[x]

என்று மந்திரத்தால் வருவது மழையில்லை . அது இயற்கையானது . இயற்கையை மாற்ற இறைவனால் முடியாது .ஆனால் அறிவியல் வளர்ந்துவிட்டது என மூட நம்பிக்கையைக் கூறி அறிவியல் வளர்ச்சியையும் கூறுகின்றார் உடுமலையார்.

இறைவன் தனிப்பெருந் தலைவன் .'எல்லாம் அவன் செயல்' என்று மக்கள் நம்பிக்கொண்டு எல்லாச் செயலிலும் இறைவன் இருக்கின்றான் .இருப்பும் பிறப்பும் அவனால் தான் என்று மூட நம்பிக்கையை தன்னுள் கொண்டு இருந்தனர் .அதனை மறுத்து உடுமலையார் தம் கருத்துக்களைப் பாடல் மூலம் தெரிவிகின்றார்.

'' ஆண் : ஆகாரம் சமைக்க சூரிய ஒளியால்
அடுப்பையும் மூட்டுறாங்க ;
ஆணைப் பெண்ணாகப் பெண்ணை ஆணாக
ஆளையே மாத்துறாங்க - இங்கே
ஆளையே மாத்துறாங்க !
பெண் : அது .... ஆயிரங்காலத்துக்கப்பாலே - நடக்கிற
ஆராய்ச்சி விசயமுங்க - நம்ம
அறிவுக்குப் பொருத்தம் ஆறு , கோயில்
அரச மரந்தானுங்க!
ஆண் : கோழியில்லாமே தன்னாலே முட்டைகளில்
குஞ்சுகளைப் பொரிக்க வச்சார் - உங்கொ ப்பன்
பாட்டன் காலத்தில் யார் இந்தக்
கோளாறைக் கண்டுபிடிச்சார் ?
பெண் : அந்தக் குஞ்சுகளைப் பொரிக்க வச்ச கோளாறுக் காரனை
முட்டையொன்னு பண்ணச் சொல்லுங்க - வாய்
கூசாமல் எதையும் யோசனை செய்யாமே

பேசுவது தப்பிதமுங்க !''[xi]

என்று மக்கள் நினைத்துக் கொண்டிருக்கின்ற கடவுள் செயலை எல்லாம் மறுத்து மக்கள் நினைப்பதையும் தானே கூறிக்கொண்டு அதற்கான விடையையும் தருகின்றார் உடுமலையார். மூடநம்பிக்கை தவறு என்பதோடு மட்டுமின்றி அதற்கான காரணத்தையும் , அது கடவுள் செயல் அல்ல அறிவியலின் வளர்ச்சி எனக் கூறுவதால் மக்கள் நம்புவதற்கு , தெளிவதற்கு எளிமையாகவும் , புரியும் தன்மையாகவும் இருக்கும். ஓர் எல்லைக்கு அப்பால் இதுதான் இறைவன் செயல் என்று மக்கள் வாதிடுவதை கவனித்துள்ளார் உடுமலையார். எட்டாத விசயம் தான் இறைவன் செயல் . அது தெரிந்துவிட்டால் அறிவியல் ஆகிவிடும். ஆராய்ந்து பாருங்கள் அறிவிழந்து போகாதீர்கள் என்று குறிப்பிடுகிறார் . இதன்மூலம் அறிவியலுக்கும் மூடநம்பிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை சரியாக விளக்குவது குறிப்பிடத்தக்கது.

*புராண மறுப்பு*

மக்கள் கடவுளை வணங்க ஆரம்பித்தவுடன் கடவுள் மனிதனை விட உயர்ந்தவர் ,சக்தி உடையவர் என்பதை நிலைநாட்டுவதற்காகப் பல்வேறுபட்ட கதைகள் கூறப்பட்டன. மனிதனால் முடியாத அனைத்தையும் கடவுள் செய்வதாக , செய்ததாகக் கூறப்பட்டு மக்களை மூளைச் சலைவை செய்தது புராணங்கள் தான். இவைகள் ஆய்விற்கு அப்பாற்பட்டவை என மக்கள் எண்ணிக் கொண்டிருந்தனர் . இதனை உடுமலையார் ,

''சாத்திரங்கள் பொய்யென்ப தெதனாலே? – யே
மாத்துகிற வார்த்தையும் இருப்பதாலே !''[xii]

என்று சாத்திரங்கள், புராணங்கள் போன்றவை பொய்யானவை அது மக்களை எமற்றுகின்றவை . அதில் உள்ளவற்றை நம்புவது அறியாமை என்றும் ,சிந்தனைகளை மழுங்கடிக்கச் செய்பவை என்றும் குறிப்பிடுவது போற்றுதற்குரியது .

புராணம், சாத்திரம் ,பஞ்சாங்கம் என ஏதும் இல்லாமல் இயற்கையை வழிபட்டு வந்த தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பட்ட ஒரு சமுதாயத்தினரின் வருகையினால் மூட நம்பிக்கை புகுந்து விட்டது . கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிற்காக எழுதிய பாடலில் ,

'' பகுத்தறிவுக் கொவ்வாத பஞ்சாங்கப் பாடைதனைப்
பார்ப்பனர்கள் சரிபாதி பாய்த்து விட்டார்''[xiii]

பஞ்சாங்கத்தைப் பாடை என மக்களிடம் எச்சரிக்கை கொடுக்கின்றார் .நாம் அழிவிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமானால் இவைகளிலிருந்து வெளிவரவேண்டும் என குறிப்பிடுகிறார் உடுமலையார் . பேரின்பம் , சிற்றின்பம் என புராணங்களில் கூறுவதை மறுத்து அன்பே பேரின்பம் என்கிறார் . இதனை ,

''பேரின்பம் பெரிதென்று
பெண்ணின்பம் சிறிதென்று
பேசுதே வேதாந்தம் - பெருமை
பேசுதே வேதாந்தம் !
ரெண்டு பேரன்புலொன்று
சேரின்பம் மேலென்று
\ தேறுதல் சித்தாந்தம்''[xiv]

என்று பேரின்பம் தான் பெரிது . பெண்ணின்பம் என்பது சிற்றின்பம் என பேசுகின்ற வேதாந்தத்தை மறுக்கின்றார் . ஆண், பெண் இருவரும் அன்பில் ஒன்று சேருவதே உண்மையான இன்பம் என அறிவதே நடைமுறை வாழ்விற்கு ஏற்றது . இதுவே சித்தாந்தம் என்று உடுமலையார் குறிப்பிடுகின்றார் .

*முடிவுரை*

பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக் கொண்டு தெளிவடைவது என்றும் கடவுளை மறுத்து இறைவனால் மனிதன் படைக்கப்பட்டான் என்றால் ஏன் இத்தனை முரண்பாடுகள் என வினாத்தொடுக்கின்றார் .

மனிதனை முடமாக்கும் மூடத்தனத்தை ஒழிக்க வேண்டும் என்பதோடு மட்டுமின்றி எல்லாம் கடவுள் செயல் என்பதை அறிவியலின் வளர்ச்சி எனக் காட்டுகின்றார் .

புராணம் , இதிகாசம் போன்றவை பொய்யானவை என்பதையும் நமக்கு அடையாளம் காட்டுகின்றார் உடுமலையார் .ஆண், பெண் இருவரும் நபில் இணைவதே நடைமுறை வாழ்விற்கு ஏற்றது என்றும் இதுவே சித்தாந்தம் என்றும் குறிப்பிடுவது அவரின் முற்போக்குச் சிந்தனையைக் காட்டுகின்றது .

அடிக்குறிப்புகள்

---

[i] .திருக்குறள் ,*423*

[ii] .தந்தை பெரியார் ,விடுதலை,நாள்: *24.10.1970*

[iii] .மேலது,நாள்: *09.11.1970*

[iv]. பாரதிதாசன்,பாரதிதாசன் கவிதைகள், ப.*87*

[v] .சங்கைவேலவன் (தொ.ஆ,) உடுமலை நாராயணகவியின் பாடல்கள் தொகுப்பு, ப.*87*

[vi] .மேலது.பக்.*193-194*

[vii] . மேலது

[viii] . மேலது

[ix] . பாரதிதாசன்,பாரதிதாசன் கவிதைகள், ப.*87*

[x] .சங்கைவேலவன் (தொ.ஆ,) உடுமலை நாராயணகவியின் பாடல்கள் தொகுப்பு, ப.*53.*

[xi] .மேலது.பக்.*193-194*

[xii] .மேலது.ப.*46*

[xiii] . மேலது.ப.*13*

[xiv] . மேலது.ப.*210*

## துணைநூற்பட்டியல்


1. மு.வரதராசன் (உ.ஆ) - திருக்குறள்<br>கழக வெளியீடு,<br>சென்னை . *1989*
2. சங்கை வேலவன் (தொ.ஆ) - உடுமலை நாராயணகவியின்<br>பாடல்கள் தொகுப்பு<br>பெரியார் சுயமரியாதைப் பிரச்சார<br>நிறுவன வெளியீடு,<br>சென்னை.*1986*
3. இராமசாமி , பெரியார் ஈ.வே ., - விடுதலை நாளிதழ் ,<br>*24.10.1970.*<br>*09.11.1970*
4. பாரதிதாசன் - பாரதிதாசன் கவிதைகள் ,<br>மணிவாசகர் பதிப்பகம்


********* ********* ********** ********* ********* ********** ********** **********